**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| அமர்வு வழக்கு எண். | 50/2020 | அரசு தரப்பு | அ.சா.2 |
|---|---|---|---|
| பெயர் | எம்.சோமசுந்தரம் | தாலூக்கா | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of $20^{th}$ day of August 2025.

**(** எதிரி ஷோபா என்கிற சவிதா ஸ்ரீமதி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்**)**

முதல் விசாரணை

நான் தற்போது விவசாயம் செய்து கொண்டிருக்கிறேன். நான் 2/144, மாரியம்மன் கோவில் வீதி, சின்னதடாகத்தில் வசித்து வருகிறேன். கடந்த 11-03-2020 அன்று நானும், எனது உறவினர் சரவணக்குமாரும் சொந்த வேலையாக சுமார் 3 மணி அளவில் ஆணைகட்டிக்கு எனது டி.வி.எஸ்.ஸ்கூட்டி டி.என்.38 பி.எக்ஸ் 6069 என்ற வாகனத்தில் சென்றோம். ஆணைகட்டி செக்போஸ்ட்டில் கியூ பிரான்ஞ் அதிகாரிகள் நிறையப்பேர் நின்று கொண்டிருந்தார்கள். அதனால் என்னவென்று நாங்கள் விசாரித்தோம். அப்பொழுது கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த சவிதா என்கிற ஷோபா என்ற மாவோயிஸ்ட்டை தாங்கள் அதிகாலையில் கைது செய்ததாகவும், அதனால் அவரை விசாரணை செய்து கொண்டிருப்பதாகவும் கூறினார்கள். அப்பொழுது வரைபடம் ஒன்றை தயார் செய்தார்கள். மகசர் ஒன்றையும் தயார் செய்தார்கள். சட்டத்திற்கு எதிராக ஷோபா செயல்பட்டதாகவும், அதனால் மகசரை தயார் செய்ததாகவும், அதற்கு சாட்சியாக இருக்குமாறும் எங்களை கேட்டுக் கொண்டார்கள். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும்

ஆவணம்தான் அங்கு வைத்து தயார் செய்த மகசர் ஆகும். முதலாவதாக உள்ளது எனது கையொப்பமாகும். இரண்டாவதாக எனது உறவினர் சரவணக்குமார் கையொப்பம் செய்துள்ளார். அப்பொழுது நேரம் சுமார் 5 அல்லது 5.30 மணி இருக்கலாம். அந்த மகசர் அ.த.சா.ஆ.2 ஆகும். இது சம்மந்தமாக கியூ பிரிவு துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்.

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் குடியிருப்பது சின்னத்தடாகத்தில்தான். ஆணைகட்டி பகுதி என்பது மலைமீது உள்ளது. சின்னதடாகத்திலிருந்து ஆணைகட்டி பகுதி சுமார் 20 கி.மீ தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். அங்கு போலீசார் இருந்தார்களா என்றால் டிப்டாப் உடையில் அதிகாரிகள் இருந்தார்கள், போலீசாரும் இருந்தார்கள். சுமார் 20,30 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். அந்த பகுதியில் போலீஸ் செக்போஸ்ட் உள்ளது. நாங்கள் போகும்பொழுது அவர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். நான் அரசியல் கட்சியில் இருக்கிறேன். நான் ப.ஜ.காவைச் சேர்ந்தவர். நான் பெரியநாயக்கன்பாளையம் மண்டலத்தில் பொது செயலாளராக இருக்கிறேன். பொதுவாக போராட்டம், அனுமதி வாங்குவது சம்மந்தமாக அடிக்கடி காவல் நிலையம் செல்வது வழக்கம் என்றால் சரிதான். பொதுவாக காவல் நிலையத்தில் என்னை பார்த்தால் மண்டல செயலாளர் என்பதால் அடையாளம் தெரிந்து கொள்வார்கள். நான் இதற்கு முன்பு எந்த வழக்குகளிலும் சாட்சியாக இருந்ததில்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளித்திருக்கிறேன் என்று சொன்னால்ல சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் ஆணைகட்டி பகுதிக்கு செல்லவில்லை என்றும், எனது முன்னிலையில் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், எனது

முன்னிலையில் மகசர் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து ஆவணத்தில் கையொப்பம் செய்து விட்டு, அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஷோபா என்ற நபர் மாவோயிஸ்ட் என்றும், சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டார் என்ற விவரத்தையும் போலீசார் என்னிடம் கூறியதாக நான் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஒன்றிய அரசின் பொறுப்பாளராக இருப்பதால் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/எம்.சோமசுந்தரம்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 50/2020 | அரசு தரப்பு | அ.சா.3 |
| பெயர் | செல்லத்துரை | தாலூக்கா | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 20th day of August 2025.

( எதிரி ஷோபா என்கிற சவிதா ஸ்ரீமதி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்)

முதல் விசாரணை

நான் தற்போது திருப்பூர் மாவட்ட கியூ பிரிவு குற்றபுலனாய்வு பிரிவில் பணிசெய்து வருகிறேன். 2022க்கு முன்பு கோவை மாவட்ட கியூ பிரிவு குற்றபுலனாய்வு பிரிவில் பணி செய்து வந்தபோது 11-03-2020 ஆம் தேதி காவல் துறையின் உயர் அதிகாரிகளின் மூலம் வந்த செய்தியைப் பெற்று அப்போதைய கோவை மாவட்ட கியூ பிரிவு ஆய்வாளர் திரு.சந்திரமோகன் அவர்களும், உடன் நானும், உதவி ஆய்வாளர் காளிதாஸ் மற்றும் தலைமைக் காவலர்களான மோகனசுந்தரம், கதிர்வேல், சம்பத்குமார், மற்றொரு காவலர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பெண் காவலர் நந்தினி ஆகியோர்கள் உட்பட இரவு 12.30 மணிக்கு கோவை மாவட்டம் ஆணைகட்டியில் உள்ள வனத்துறைக்குச் சொந்தமான சோதனை சாவடியில் வழக்கமாக வாகன சோதனையில் ஈடுபட்டிருக்கும்பொழுது அதிகாலை சுமார் 5.30 மணிக்கு டி.என்.33 2972 என்ற பதிவு எண் கொண்ட அரசு

பஸ் ஆணைகட்டி முதல் கோவை மாநகரம் வரைசெல்லும் அரசு பஸ்ஸை தணிக்கை செய்யும்பொழுது அந்த பஸ்ஸினுள் சந்தேகம்படும்படியான நபர் கருப்பு நிறத்தில் பச்சை மற்றும் மஞ்சல் கலர் சுடிதார் அணிந்த நபர் பஸ்ஸிலிருந்து இறங்க முற்பட்டார். அப்போது ஆய்வாளர் மற்றும் உடன் இருந்த பெண் காவலர் நந்தினி ஆகியோர் அவரை தடுத்து நிறுத்தி விசாரிக்கும்பொழுது முன்னுக்குபின் முரணான கருத்துக்களை சொல்லி பஸ்ஸிலிருந்து இறங்கி விட்டார். உடன் இருந்த காவலர்கள் அனைவரும் பஸ்ஸில் இருந்து இறங்கினோம். பின்பு சோதனை சாவடிக்கு முன்பு உள்ள விளக்கு வெளிச்சத்தில் அமர வைத்து பெண் காவலர் நந்தினியுடன் விசாரணையை ஆய்வாளர் மேற்கொண்டார். அவருடைய பெயர் ஷோபா என்கிற ஸ்ரீமதி என்றும், அவர் 23 வயதுடையவர் என்றும், அவருடைய அப்பா பெயர் சின்னான் என்றும், அவருடைய சொந்த ஊர் கர்நாடகா மாநிலம் ஷிமோகா மாவட்டம், மேல்சிகா என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும், நான் சி.பி.ஐ. மாவோயிஸ்ட் இயக்கத்தில் தமிழ்நாடு, கேரளா, மற்றும் கர்நாடகா பகுதிகளில் துப்பாக்கி பயிற்சி செய்ய வன பகுதியில் உள்ள கிராமங்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்து வருவதாகவும், மற்றும் பவானி தளம் மற்றும் நாடுகானிதளம் பகுதிகளில் பி.ஜி.கிருஷ்ணமூர்த்தி, விக்ரம் கவுடா, மற்றும் ஜான் என்ற ஜெயனார் ஆகியோர்கள் உட்பட 20 பேர் சி.பி.ஐ மாவோயிஸ்ட் இயக்கத்தினர் அந்த பகுதிகளில் அரசை பற்றி அவதூறாக பிரச்சாரம் செய்தும், ஆயுதப்பயிற்சி செய்து வருவதாகவும் தெரிவித்தார். மத்திய குழுவின் உத்திரவின்பேரில் தான் கர்நாடகா மாநிலத்திற்கு மாவோயிஸ்ட் இயக்கம் சம்மந்தமாக பிரச்சாரத்திற்கு செல்லவுள்ளதாகவும், அதற்காக இந்த பஸ்ஸில் தான் கோயமுத்தூருக்கு சென்று கோயமுத்தூரிலிருந்து கர்நாடகாவிற்கு பஸ்ஸில் செல்வதாகவும் கூறினார். நான் பவானிதளம் மற்றும் நாடுகானி தளத்தில் அரசுக்கு

எதிராக பிரச்சாரங்களை செய்து வருவதாகவும், சி.பி.ஐ மாவோயிஸ்ட் சித்தாதங்களுக்கு தான் தீவிரமாக பிரச்சாரம் செய்து வருவதாகவும், தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும் தெரிவித்தார். பின்பு அவர் கையில் வைத்திருந்த வெளிர் சந்தன கலர் உள்ள தோல்பையை மாவோயிஸ்ட் இயக்கத்திற்கு பயன்படுத்திய மைக்ரோ மைக்ஸ் பட்டன் செல்போன் ஒன்று, சேன்டிஸ்க் கம்பெனியைச் சேர்ந்த மெமரி கார்டு 16 ஜி.பி ஒன்றும், ஐடியா சிம்கார்டு ஒன்றம், மாவோயிஸ்ட் சித்தாந்தம் மற்றும் கம்யூனிசம் சம்மந்தமான ஸ்பைரல் பைண்ட்டிங் புத்தகம் மூன்று, பணம் ரூ.500 ஒன்றும், ஒரு வெள்ளை நிற மலகாகிதப்பையில் சுற்றி வைத்திருந்தார். சாட்சி மேற்சொன்ன பொருட்களை நீதிமன்றத்தில் ஒவ்வொன்றையும் பார்த்து அடையாளம் காண்பித்தார். அவைகள் ஏற்கனவே சா.பொ.1 முதல் 9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வனசோதனை சாவடியில் வனக்காப்பாளர்களான சுப்பிரமணியம் மற்றும் முருகைய்யன் ஆகியோர்களின் முன்னிலையில் ஆய்வாளர் அவர்கள் மேற்கண்ட சொத்துக்களை சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றினார். 9 மணி முதல் 9.30 மணிவரை இந்த நடவடிக்கைகள் நடந்தது. பின்பு ஆய்வாளர் தன்னுடன் இருந்த பெண் காவலர் உதவியுடன் ஷோபா என்கிற ஸ்ரீமதியை உடன் அழைத்துக் கொண்டு கோவை மாவட்ட கியூ பிரிவு அலுவலகத்திற்கு காலை 11 மணிக்கு அழைத்து வரப்பட்டார். சி.பி.ஐ மாவோயிஸ்ட் இயக்கம் சம்மந்தமாக ஷோபா பிரச்சாரம் செய்ததாகவும், தடை செய்யப்பட்ட இயக்கத்திற்காக பிரச்சாரம் செய்ததால் ஷோபா என்கிற சபிதா என்கிற ஸ்ரீமதி, த/பெ சின்னான், கோவை மாவட்ட கியூ பிரிவு கு.எண்.1/2020 ன்கீழ் இ.த.ச. பிரிவு 505(1)(a). Section 20, 38 of Unlawful prevention Act 1967 ன் கீழ் வழக்கு பதிவு செய்து குற்றபத்திரிக்கை நகலை கோயமுத்தூர் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற

நகல்களை காவல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், கோவை முதன்மை மாவட்ட கியூ பிரிவு அதிகாரிக்கு மேல் விசாரணைக்கு அனுப்பியும், எதிரியை நீதிமன்றத்தில் ஒப்படைத்தும், மேற்கண்ட சொத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. என்னை இது சம்மந்தமாத கோவை மாவட்ட கியூ பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார். சாட்சி எதிரியை நீதிமன்றத்தில் சரியாக அடையாளம் காட்டினார்.

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

சோதனை செய்யும்பொழுது அதன் விவரத்தை சோதனை பதிவேட்டில் குறிப்பிடவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சோதனை செய்யும்பொழுது எந்த ஆவணத்தையும் பராமரிக்கவேண்டியதில்லை. நான் கூறுவது தவறு என்றும், பொதுவாக சோதனை செய்த விவரங்களை பதிவேட்டில் எழுதுவது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. நான் சோதனை செய்ததற்கான எந்த பதிவுகளும் இல்லை. நான் அந்த சோதனையில் பங்கெடுத்தேன் என்று கூறுவதற்கு ஆதாரமாக ஆவணம் இல்லை என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரிக்கும்பொழுது பேரூந்தில் குறிப்பாக எந்த இடத்தில் எதிரி அமர்ந்திருந்தார் என்று நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்பொழுது எதிரியின் அங்கமச்ச அடையாளங்களைப் பற்றி நான் கூறவில்லை என்று சொன்னால் தவறு. போலீசார் விசாரணையின்பொழுது எதிரி கிராமங்களுக்கு துப்பாக்கி பயிற்சிக்கு செல்வார் என்று நான் கூறவில்லை என்றால் சரியல்ல. பேரூந்தில் இருந்த பயணிகள் யாரையும் நாங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மத்திய குழுவின் உத்திரவின் அடிப்படையில் எதிரி சென்றதாக போலீசார் விசாரணையின்பொழுது நான் கூறியுள்ளேன். எதிரி சி.பி.ஐ.மாவோயிஸ்ட் என்ற

இயக்கத்தில் உறுப்பினராக இல்லை என்றும், அந்த இயக்கத்தோடு அவருக்கு எந்த தொடர்பும் இல்லை என்றும், நான் கியூ பிராஞ்சில் அதிகாரியாக இருப்பதால் மேல் அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறியவாறு அந்த இடத்தில் வைத்து எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அவரிடமிருந்து எந்த வழக்கு சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. **2015** ஆம் ஆண்டில் போடப்பட்ட ஒரு குற்ற வழக்கில் இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்ட மூன்று புத்தகங்களைப் போன்று புத்தகங்கள் அந்த வழக்கிலும் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கிலிருந்து அந்த புத்தகங்களின் நகல்களை எடுத்து இந்த வழக்கிலும் கைப்பற்றப்பட்டதாக வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு எதிராக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனது முன்பாக கைது செய்யப்படவில்லை என்றும், எங்களது முன்னிலையில் சோதனையும் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் அவ்வாறு சோதனையில் ஈடுபட்டிருந்தால் அதற்குரிய ஆவணங்கள் எங்களிடம் இருந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

ஒம்/செல்லதுரை,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.